# அருள்திரு. சந்தியாகு
# அவர்களின் வாழ்க்கை குறிப்பு

இவர் 1869-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் உள்ள சிலுக்குவார்பட்டி என்னும் கிராமத்தில் பிறந்தவர். இவருடைய பாட்டனார் பிரிந்தானியாப் பட்டாளத்தில் சிப்பாயாக பணி செய்தவர். அப்பால் திருச்சிராப்பள்ளியை விட்டு சிலுக்குவார்ப்பட்டிக்கு வந்து குடியேறினார். அக்காலத்தில் இவர் ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர். பின்னால் இவரது தகப்பனார் ரோமன் கத்தோலிக்க மதத்தை விட்டு சீர்திருத்த கிறிஸ்தவரானார். கொடிய வைராக்கியமுடைய கத்தோலிக்க இனத்தாரால் இவருக்கு வந்த துன்பத்துக்களவில்லை. இவர் இத்துன்பங்களைப் பொறுமையுடன் சகித்தவராய் தமது ஊழியத்தை நிறைவேற்றி வந்தார். இவருக்கு குமாரரும், ஒரு குமாரத்தியும் பிறந்தனர். நாலு குமாரரில் சந்தியாகு ஐயர் இளையவர் ஏசுக் கிறிஸ்துவின் சேவைக்காகத் தம்பிள்ளைகளை ஒப்படைக்கவேண்டுமென்பதே இவருடைய ஆவல். கடவுளும் இந்நால்வரையும் சுவிசேஷகர்களாகவும், கிறிஸ்தவ குருக்களாகவும் தமது திருச்சபையில் உபயோகித்திருப்பது நாம் நோக்கத்தக்கது.

மிகுந்த துன்பங்களுக்கிடையே இவருடைய தகப்பனார் இவரைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார். இவர் தமது பாடங்களை நன்றாய்ப் படித்து வந்தார். அதன்பின் இவரது தகப்பனார் இவரை வத்தலக்குண்டிலிருந்த மாணவர் விடுதிக்கு அனுப்பினார். நான்கு ஆண்டுகள் அப்பாடச் சாலையில் கற்றார். தமது வகுப்பில் முதன்மையாய் நின்றார். அங்கே மறைதிரு. ஜே.எஸ்.சாண்டலர் ஐயருடைய செல்வாக்கு இவர் மேல் அதிகமாயிருந்தது. 1852-ஆம் ஆண்டு பசுமலைப் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தார். இங்கே ஒன்பது ஆண்டுகள் இடைவிடாமல் கற்றுத் தேர்ந்தார். இக்காலங்களிலெல்லாம் பசுமலைக் காலசாலைத் தலைவரான மறைத்திரு. உவாஷ்பர்ன் ஐயரவர்கள் இவரைப் பெரிதும் பரிபாலித்து வந்தார். சத்தியாகு ஐயர் பசுமலைக் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவருடைய சிறப்புப்பாடம் கணிதம். 1891-ஆம் ஆண்டு முதல் கனம் சந்தியாகையரே பசுமலைக் கல்லூரியில் தலைமைக் கணித ஆசிரியராக இருந்தார். இக்காலத்தில் இவர் வேதசாத்திரக் கல்விச்சாலையிலும் சில பாடங்கள் படித்துக் கொடுத்தார். பசுமலையில் இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் இவரது செல்வாக்கு மாணாக்கரிடத்தும் மற்றவரிடத்தும் அதிகமாயிருந்தது. வேதவாசிப்பு, ஜெபவாழ்க்கை, சுவிசேட வைராக்கியம் முதலிய குணங்கள் பசுமலையில் உள்ளவர்களிடத்தில் உற்பத்தியாவதற்கு இவர் சிறப்பான கருவியாயிருந்தார்.

1908-ஆம் ஆண்டு இவர் வத்தலக்குண்டு சபைக்குப் போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டார். அக்காலத்தில் வத்தலக்குண்டிலிருந்த பிரபல மிஷனெரியான செர்வுட் எடி அவர்களும் நமது ஐயரவர்களும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். எடி அவர்கள் 1910-ஆம் ஆண்டு அவ்விடத்தை விட்டு போய்விட்டாலும் இவர்களுடைய நட்பு கடைசி வரைக்கும் நிலைத்திருந்தது.

1911-ஆம் ஆண்டு பசுமலைச் சபைக்குப் போதகராக அழைக்கப்பட்டு ஒன்றரை ஆண்டு ஊழியம் செய்தபின் தமது மனைவியின் சுகயீனத்தினிமித்தம் திரும்பவும் வத்தலக்குண்டுக்கு வந்தார்.

1917-ஆம் ஆண்டு தென்னிந்திய ஐக்கியத் திருச்சபையின் தலைவராக இவர் தெரிந்தெடுக்கப்பெற்றார். யுத்தத்தின் பயனாக ஜெர்மன் மிஷனெரிகள் இந்தியாவினின்று அப்புறப்படுத்தப்பட்ட காலத்தில் அவர்களால் நடத்தப்பட்டு வந்த மலையாள மிஷனெரி ஊழியத்தை நடத்திவருவதற்கு மதுரை அமெரிக்கன் மிஷன் சந்தியாகு ஐயரையும் பானிங்கா ஐயரையும் அனுப்பியது. இவ்விருவரும் நிலைகுலைந்திருந்த மலையாளக் கிறிஸ்தவ சபைகளைச் சீர்ப்படுத்தி, சபைச் சங்கத்தைக் ஸ்தாபித்து, இவ்விதமாய் அச்சபை முன்னேறுகிறதற்கான காரியங்களைச் செய்து வந்தனர்.

ஐயரவர்கள் தான் முதன்முதலாய்த் தென்னிந்திய ஐக்கியத் திருச்சபையின் நடுவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவியை ஐயரவர்கள் 1919-ஆம் ஆண்டு முதல் 1921-ஆம் ஆண்டு முடிய திறமையுடன் வகித்தார்.

சபை ஐக்கிய விஷயமாய் ஐக்கிய இயக்கம் உண்டான கால முதலாகவே அதிக சிரத்தையுடன் உழைத்து வந்திருக்கின்றனர். தரங்கம்பாடியில் உத்தியோகப்பற்றற்ற கிறிஸ்தவ தலைவர்கள் மாநாடு கூடியது முதல் அவருடைய மரணம் வரைக்கும் நடைபெற்ற சபை ஐக்கிய ஆலோசனை சங்கங்கள் அனைத்திலும் ஐயரவர்கள் சிறப்பான இடம் வகித்து வந்தனர்.

1920-ஆம் ஆண்டு மறைத்திரு.திரேஸி ஐயர் தமது வியாதியினால் விலகிக்கொண்ட பொழுது ஐயரவர்கள் மதுரைத் திருச்சபை சங்கத்து மேற்கு லோக்கல் கவுன்சிலுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். மதுரை அமெரிக்கன் மிஷன் சரித்திரத்தில் இந்த உத்தியோகத்துக்கு ஓர் இந்தியர் நியமிக்கப் பெற்றது இதுவே முதல் தடவை. மிகுந்த உத்திரவாதமுள்ள இவ்வூழியத்தை ஐயரவர்கள் தேவ உதவியைக் கொண்டு வெகு திறமையாக நடத்தி வந்திருக்கிறார்கள்.

மதுரைத் திருச்சபை சங்கத்தலைவர் பதவிக்கு முதல் இந்தியராகத் தெரிந்தெடுக்கப்பட்டவரும் ஐயரவர்களே. இத்துடன் மேற்கு லோக்கல் கவுன்ஸில் தலைமைப் பதவியையும் ஒருங்கே ஏற்று ஐயரவர்கள் திறம்பட பணியாற்றி வந்தார்.

Mrs. Kasturi pannerselvem
Grand Daughter of The Rev. V.Santiago